# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.121/2025

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சின்னப்பன் | Father's Name | : | சுப்பையன் |
| Village | : | அதிராம்பட்டினம் | Taluk | : | அதிராம்பட்டினம் |
| Calling | : | | Age | : | 53 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 09th day of January 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது அதிராம்பட்டினம் கடலோர பாதுகாப்பு குழுமத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.01.2023 அன்று காலை 8.15 மணிக்கு நான், நீடாமங்கலம் காவல் உதவி ஆய்வாளர் திரு நெடுஞ்செழியன், காவலர் 1318 திரு குமார் ஆகியோரும் நீடாமங்கலம்-தஞ்சாவூர் மெயின் ரோட்டில் கடம்பூர் பாமணி ஆற்று பாலம் அருகே கண்காணித்து வந்தபோது ஏற்கனவே அடையாளம் தெரிந்த சேனா (எ) சேனாபதி பாமணியாற்று பாலமருகே நின்று கொண்டு கை சட்டையை மடக்கி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:56:44 +0530

பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பலமாக சத்தம் போட்டுக்கொண்டு தான் வளரும் தமிழகம் கட்சியில் ஒன்றிய தலைவராக இருப்பதாகவும் பல வழக்குகள் இருப்பதாகவும் தனக்கு கட்சியில் செல்வாக்கு வரவேண்டுமென்றால் அமைதியை கெடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் பொதுமக்களுக்கு பயத்தையும் பீதியையும் ஏற்படுத்தும் வகையில் அருவாளை கையில் வைத்துக்கொண்டு மெயின் ரோட்டில் வரும் நபர்களுக்கு அச்சத்தையும் பயத்தையும் உண்டுபண்ணி கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ஒருவரின் சட்டை பையில் இருந்த பணத்தை எடுடா என சொல்லி மிரட்டி கொண்டிருந்த சேனா (எ) சேனாபதியை அமைதியாக செல்லும்படி நானும் உதவி ஆய்வாளரும் காவலர் குமாரும் பலமுறை எச்சரித்தும் பொதுமக்களையும் பயணிகளையும் யாராவது கிட்டே வந்தால் அருவாளால் வெட்டி கொலை செய்து விடுவேன் என சத்தம் போட்டவரை உதவி ஆய்வாளர் சொன்னதன் பேரில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவரை மடக்கி பிடித்து குற்ற காரணம் கூறி உதவி ஆய்வாளர் அவரை கைது செய்தும் பின்னர் உதவி ஆய்வாளர் முன்னிலையில் எதிரி கொடுத்த வாக்குமூலத்தை சாட்சிகள் குருமூர்த்தி, லெனின் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தும் எதிரி ஆஜர் செய்த அருவாளை அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 9.30

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:56:50 +0530

மணியளவில் கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நீடாமங்கலம் காவல் நிலையம் கொண்டுவந்து உதவி ஆய்வாளர் முதல் தகவலறிக்கை பதிவு செய்தார். அதற்கு நான் உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

அருவாளின் விதங்கள் தெரியும். கைப்பற்றப்பட்ட அருவாளின் விதம் பற்றி ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. நீடாமங்கலம்-தஞ்சாவூர் சாலை நிறைய வாகன நடமாட்டம் மற்றும் மக்கள் அதிகம் செல்லும் பகுதி என்றால் சரி. அன்றைய தினம் ரோந்து பணிக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்ற விபரத்தை ஆய்வாளர் விசலாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை எனவும் எதிரியிடமிருந்து எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை எனவும் தடய பொருள் வழக்கிற்காக பின்னிட்டு ஜோடிக்கப்பட்டவை என்றால் தவறு. புள்ளி விபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கில் ஆய்வாளருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிக்கும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:56:55 +0530

இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:57:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.121/2025**

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குமார் | Father's Name | : | சட்டநாதன் |
| Village | : | தென்காசி | Taluk | : | தென்காசி |
| Calling | : | | Age | : | 30 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 09th day of January 2026.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி மாவட்ட ஆயுதப்படையில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.01.2023 அன்று காலை 8.15 மணிக்கு நான், நீடாமங்கலம் காவல் உதவி ஆய்வாளர் திரு நெடுஞ்செழியன், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு சின்னப்பன் ஆகியோரும் நீடாமங்கலம்-தஞ்சாவூர் மெயின் ரோட்டில் கடம்பூர் பாமணி ஆற்று பாலம் அருகே கண்காணித்து வந்தபோது ஏற்கனவே அடையாளம் தெரிந்த சேனா (எ) சேனாபதி பாமணியாற்று பாலமருகே நின்று கொண்டு கை சட்டையை மடக்கி பொதுமக்களை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:57:09 +0530

அச்சுறுத்தும் வகையில் பலமாக சத்தம் போட்டுக்கொண்டு தான் வளரும் தமிழகம் கட்சியில் ஒன்றிய தலைவராக இருப்பதாகவும் பல வழக்குகள் இருப்பதாகவும் தனக்கு கட்சியில் செல்வாக்கு வரவேண்டுமென்றால் அமைதியை கெடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் பொதுமக்களுக்கு பயத்தையும் பீதியையும் ஏற்படுத்தும் வகையில் அருவாளை கையில் வைத்துக்கொண்டு மெயின் ரோட்டில் வரும் நபர்களுக்கு அச்சத்தையும் பயத்தையும் உண்டுபண்ணி கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ஒருவரின் சட்டை பையில் இருந்த பணத்தை எடுடா என சொல்லி மிரட்டி கொண்டிருந்த சேனா (எ) சேனாபதியை அமைதியாக செல்லும்படி நானும் உதவி ஆய்வாளரும் காவலர் குமாரும் பலமுறை எச்சரித்தும் பொதுமக்களையும் பயணிகளையும் யாராவது கிட்டே வந்தால் அருவாளால் வெட்டி கொலை செய்து விடுவேன் என சத்தம் போட்டவரை உதவி ஆய்வாளர் சொன்னதன் பேரில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவரை மடக்கி பிடித்து குற்ற காரணம் கூறி உதவி ஆய்வாளர் அவரை கைது செய்தும் பின்னர் உதவி ஆய்வாளர் முன்னிலையில் எதிரி கொடுத்த வாக்குமூலத்தை சாட்சிகள் குருமூர்த்தி, லெனின் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தும் எதிரி ஆஜர் செய்த அருவாளை அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 9.30

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:57:15 +0530

மணியளவில் கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நீடாமங்கலம் காவல் நிலையம் கொண்டுவந்து உதவி ஆய்வாளர் முதல் தகவலறிக்கை பதிவு செய்தார். அதற்கு நான் உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

அருவாளின் விதங்கள் தெரியும். கைப்பற்றப்பட்ட அருவாளின் விதம் பற்றி ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. நீடாமங்கலம்-தஞ்சாவூர் சாலை நிறைய வாகன நடமாட்டம் மற்றும் மக்கள் அதிகம் செல்லும் பகுதி என்றால் சரி. அன்றைய தினம் ரோந்து பணிக்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்ற விபரத்தை ஆய்வாளர் விசலாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை எனவும் எதிரியிடமிருந்து எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை எனவும் தடய பொருள் வழக்கிற்காக பின்னிட்டு ஜோடிக்கப்பட்டவை என்றால் தவறு. புள்ளி விபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கில் ஆய்வாளருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. ஆஜர் எதிரிக்கும்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.01.09 15:57:21 +0530

இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.01.09 15:57:27 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.121/2025**

**Deposition of Witness for Prosecution PW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நெடுஞ்செழியன் | Father's Name | : | கலியபெருமாள் |
| Village | : | திருவையாறு | Taluk | : | திருவையாறு |
| Calling | : | | Age | : | 59 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 09th day of January 2026.**

**(Accused present / absent. For petition U/s. 355 BNSS is filed and allowed).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவையாறு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 27.01.2023 அன்று 8.15 மணிக்கு நீடாமங்கலம் காவல் நிலைய உதவி ஆய்வாளராகிய நான், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு சின்னப்பன் காவலர் 1318 திரு குமார் சகிதம் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாதவாறு நீடாமங்கலம் பகுதியில் ரோந்து அலுவல் செய்து வந்தபோது நீடாமங்கலம்-தஞ்சாவூர் மெயின் ரோட்டில் கடம்பூர் பாமணியாறு பாலம் அருகில் எனக்கும் என்னுடன் வந்த காவல் ஆளிநர்களுக்கும்

SELVA MUTHU KUMARI — Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.01.09 15:57:35 +0530

முன்பே அடையாளம் தெரிந்த வலங்கைமான் தாலுகா, அரையூர் தென்பாதி தெருவை சேர்ந்த பாலசுப்பிரமணியன் மகன் சேனா (எ) சேனாபதி என்பவர் சம்பவ இடத்தில் தானாகவே கை சட்டையை மடக்கி விட்டுக்கொண்டு பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பலத்த சத்தமாக பேசிக்கொண்டு தான் வளரும் தமிழக கட்சியில் வலங்கைமான் கிழக்கு ஒன்றிய தலைவராக இருந்து வருவதாகவும் தான் பல அடிதடி கொலை சம்பவங்களில் சம்மந்தப்பட்டு தன்மீது பல வழக்குகள் உள்ளதாகவும் தமிழ்நாட்டில் பெரிய ஆளாக வரவேண்டும் என்றும் தான் இருக்கும் கட்சியில் தனக்கு செல்வாக்கு கிடைக்க வேண்டும் என்றும் அமைதியா இருந்தா எவனும் நம்மல கண்டுக்க மாட்டாங்க அதனால் பொது இடத்தில் பொது மக்களுக்கு அச்சுறுத்தும் வகையில் பொதுமக்களுக்கு பயத்தையும் பீதியையும் ஏற்படுத்தும் வகையில் அரசு பேருந்து கண்ணாடிகளை உடைத்து, பொது சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தி அரசாங்கத்திற்கு பெருத்த நஷ்டத்தை உண்டு பண்ணினாதான் நான் யாரென்று தெரியும் அப்போதுதான் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளில் இதுபற்றி செய்தி போடுவாங்க அப்பதான் நான் நாடு முழுவதும் பிரபலமாகி பெரிய செல்வாக்கு மிக்க ஆளாக முடியும் என்று சத்தமாக பேசிக்கொண்டு இருந்தவர் கையில் வைத்திருந்த பெரிய அருவாளை ரோட்டில் கிழித்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:57:42 +0530

அந்த வழியாக மெயின்ரோட்டில் சென்ற ஒரு நபருக்கு அச்சத்தையும் பயத்தையும் உண்டுபண்ணி சட்டையில் இருந்த பணத்தை எடுடாவென்று மிரட்டியதும் அவர் பயந்து கொண்டு அங்கிருந்து தப்பித்து ஓடிவிட்டார். பின்னர் மேற்படி நபரை அங்கிருந்து அதைதியாக செல்லுமாறு போலீசாராகிய நாங்கள் பலமுறை எச்சரித்தும் கேளாமல் பொது இடத்தில் நின்றுகொண்டு பொதுமக்களையும் பயணிகளையும் வருவோர் போவோர்களையும் யாராவது என்கிட்ட வந்தா அருவாளால் வெட்டி கொலை செய்து விடுவேன்னு மிரட்டிய மேற்படி நபரை இப்படியே வெளியே விட்டால் அரசு சொத்துக்களுக்கு சேதத்தையும் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலையும் ஏற்படுத்துவார் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காகவும் அவர் செய்த குற்ற செயலுக்காகவும் அதே இடத்தில் காலை 8.15 மணிக்கு கைது செய்து சாட்சிகள் குருமூர்த்தி, லெனின் ஆகியோர் முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதில் நான் பொதுமக்களை அச்சுறுத்த பயன்படுத்திய அருவாளை தங்களிடம் ஆஜர் செய்தேன் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.2**. எதிரி வைத்திருந்த சுமார் 57½ செ.மீ. நீளமுடைய வாள் போன்ற பெரிய அருவாளை மேற்படி 2 சாட்சிகள் முன்னிலையில் 9.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3**.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:57:49 +0530

அருவாள் **சா.பொ.1.** சா.பொ.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட படிவம் 91 **அ.சா.ஆ.4**. எதிரி மற்றும் தடயத்துடன் 10.00 மணிக்கு நிலையம் கொண்டுவந்து எதிரியின் மீது நீடாமங்கலம் காவல் நிலைய கு.எண் 29/2023, இதச பிரிவுகள் 386, 506(2), Cr.PC 151 r/w CLA Act 7(1)(a) & 25(1-A) Arms Act ன்படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.5**. 27.01.2023 அன்று சாட்சிகள் குருமூர்த்தி, லெனின் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். வழக்கு கோப்பினை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் புகார்தாரரும் மற்றும் முதல் தகவலறிக்கை பதிவு செய்ததும் நான்தான் என்றால் சரி. அ.சா.ஆ.5 ல் காலம் எண் 14 ல் நான் கையொப்பம் போடவில்லை என்றால் சரி. முதல் தகவலறிக்கை நான் பதிவு செய்ததால் கையொப்பம் போடவில்லை. நீடாமங்கலம்-தஞ்சாவூர் சாலை மக்கள் அதிகம் நடமாட்டம் மற்றும் வாகனங்கள் அதிகம் செல்லக்கூடிய பகுதி என்றால் சரி. தனி நபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் யாரும் முன்வராததால் விசாரிக்கவில்லை. மேற்படி விபரத்தை பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. அருவாளின் விதங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரி. புகாரிலோ முதல் தகவலறிக்கையிலோ அருவாளின் விதம் பற்றி நான்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:57:56 +0530

குறிப்பிடவில்லை என்றால் சரி. அருவாளின் நீளம், அகலம் குறித்து புகாரிலோ முதல் தகவலறிக்கையிலோ குறிப்பிடவில்லை என்றால் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டுள்ளேன். நான் சொன்ன தேதியில், இடத்தில், சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை எனவும் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை எனவும் எதிரியிடமிருந்து தடய பொருள் எதுவும் கைப்பற்றவில்லை எனவும் சொன்னால் தவறு. தடய பொருள் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவை என்றால் தவறு. புள்ளி விபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கில் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வழக்காவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் தவறு. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்புமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:58:01 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.121/2025**

**Deposition of Witness for Prosecution PW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சிவபிரகாசம் | Father's Name | : | தனபால் |
| Village | : | திருச்சிராப்பள்ளி | Taluk | : | திருச்சிராப்பள்ளி |
| Calling | : | | Age | : | 55 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 09th day of January 2026.**

**(Accused present).**

**சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டுமென்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க MP No.3, Dated 08.01.2026 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற முதன்மை மாவட்ட நீதிபதிக்கு அனுப்பப்பட்ட இந்நீதிமன்ற கடித எண் 140/2026, நாள் 08.01.2026 ன்படி திரு சிவபிரகாசம் அவர்கள் காணொலி மூலமாக விசாரிக்கப்படுகிறார்.**

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:58:08 +0530

திருச்சிராப்பள்ளி முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் திரு D.கணேஷ்குமார் (System Analyst) என்பவர் Remote Point Co-ordinator ஆக இருக்கிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சிராப்பள்ளி அமர்வு நீதிமன்ற காவல் நிலையத்தில் சட்டம் & ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீடாமங்கலம் காவல் நிலைய கு.எண் 29/2023 வழக்கு கோப்பினை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 27.01.2023 அன்று காலை 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பசுபதி, சதீஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6**. 27.01.2023 அன்று சாட்சிகள் பசுபதி, சதீஷ், சிறப்பு உதவி ஆய்வாளர் சின்னப்பன், 2 ம் நிலை காவலர் குமார், உதவி ஆய்வாளர் நெடுஞ்செழியன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். எனது புலன் விசாரணை முடித்து 03.04.2023 அன்று எதிரி மீது இதச பிரிவுகள் 386, 506(2), Cr.PC 151 r/w CLA Act 7(1)(a) &

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:58:15 +0530

25(1-A) Arms Act ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் குருமூர்த்தி, லெனின் ஆகியோர் சம்பவம் பற்றி கூறியதையே நான் வாக்குமூலங்களாக பதிவு செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் விசாரணை அதிகாரி மட்டும்தான் நான் என்றால் சரி. புகார் மற்றும் முதல் தகவலறிக்கை நான் பதிவு செய்யவில்லை என்றால் Rounds செல்லும் போது நடந்த பிரச்சனை. சிறப்பு உதவி ஆய்வாளர் சின்னப்பனை விசாரித்த போது எந்த வாகனத்தில் சென்றதாக விசாரித்தேனா என்றால் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை எனவும் வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் தவறு. அருவாளின் விதங்கள் தெரியும் என்றால் தெரியும். வாள் போன்ற இரும்பு அருவாள் என சொல்லியுள்ளேன். காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கு என்றால் தவறு. உதவி ஆய்வாளரால் கைப்பற்றப்பட்ட சான்று பொருள் வழக்கிற்காக பின்னிட்டு ஜோடிக்கப்பட்டவை என்றால் தவறு. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் தவறு. எதிரியை சொன்ன

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:58:22 +0530

நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை எனவும் எதிரியிடமிருந்து எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை எனவும் சொன்னால் தவறு. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.09 15:58:27 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.